**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்**
**O.S. No. 625/2023**

**வா.சா.1 / புஷ்பவள்ளி /19.07.2025**

**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

வாதிகள் சார்பாக தாக்கல் செய்துள்ள பிராதில் 3ம் பிரதிவாதிக்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்று சொன்னால் சரிதான். ஆகவே, 3ம் பிரதிவாதிக்கு எதிராக இவ்வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் தற்போது வழக்கறிஞராக தொழில் புரிந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் 2015ம் ஆண்டு சட்டப்படிப்பை படித்து முடித்தேன். இவ்வழக்கு தாக்கல் செய்யும் போது நான் சட்டப்படிப்பு பயின்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். எனக்கு தமிழ் எழுத, படிக்க தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது எனக்கு வயது 37. என் அப்பாவுடன் பிறந்தவர்கள் மொத்தம் 6 தம்பிகளும், 2 சகோதரிகளும் ஆகும். தாவா சொத்துக்கள் என் அப்பாவின் சகோதரர் மற்றும் அவரது மனைவியான முனியப்பன் மற்றும் அவரது மனைவி ஈஸ்வரி ஆகியோருக்கு கிரய பத்திரத்தின் படி பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து அமைந்துள்ள குன்னத்தூருக்கும் வெள்ளோடுக்கும் இடையே சுமார் 36 கிமீ இடைவெளி இருக்கும் என்று சொன்னால் சரிதான். எனது சித்தப்பாவும் 1ம் வாதியுமான முனியப்பன் மற்றும் அவரது மனைவி உட்பட அவரது குடும்பத்தார் வெள்ளோட்டில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். என் அப்பா முருகன் இடம் வாங்கி விற்கும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அவர் இரும்பு கடை வைத்து மட்டும் தொழில் செய்து வருகிறார். அவ்வாறு சொல்வது தவறு என்றும் என் அப்பா குன்னத்தூரில் ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் குன்னத்தூரில் தான் வசித்து வருகிறேன் என்பதற்கு ஆதாரமாக ஆவணம் ஏதாவது இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தேவைப்பட்டால் தாக்கல் செய்ய முடியும். என் அப்பாவிற்கு சொந்தமாக நாங்கள் வசிக்கும் வீடும், கடை மட்டுமே உள்ளது. பிரமாண வாக்குமூலத்துடன் நான் தாக்கல் செய்துள்ள ஒட்டுமொத்த 9 ஆவணங்களையும்

படித்து பார்த்துள்ளேன். வா.சா.ஆ.3 பொது அதிகார பத்திரத்தில் சாட்சியாகவும், இன்னாரென்று நிரூபித்தவராகவும் என் அப்பா அதில் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். இவ்வழக்கின் பிராதிலோ, நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலோ மேற்கண்டாவறு என் அப்பா பொது அதிகார பத்திரத்தில் என் அப்பா சாட்சி கையொப்பம் செய்துள்ளதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேலும், வா.சா.ஆ.3 பொது அதிகார பத்திரம் ஏற்பட்டது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 பொது அதிகார பத்திரம் ஏற்படும் போது நான் ஈரோட்டில் உள்ள துடுப்பதில் ஈரோடு செங்குந்தர் பொறியியல் கல்லூரியில் பொறியியல் பட்டப்படிப்பு படித்து கொண்டிருந்தேன். மேலும், இவ்வழக்கை நடத்த எனக்கு வழங்கப்பட்ட வா.சா.ஆ.1 அதிகார பத்திரத்திலும் என் அப்பா தான் முதல் சாட்சியாக அதில் கண்டுள்ளார் என்றால் சரிதான். 08.09.2012 ல் வில்லங்க சான்று எடுத்து பார்த்த போது 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரய பத்திரம் ஏற்படுத்தியது அறிந்து கொண்டேன் எனக் கூறி தாவா தாக்கல் செய்துள் நிலையில் முனியப்பன் மற்றும் ஈஸ்வரி ஆகியோர் எங்களுக்கு 21.04.2014ம் தேதியன்று தான் வழக்கு நடந்த பொது அதிகார பத்திரம் வழங்கியுள்ளதால் அதற்கு இடைப்பட்ட காலத்தில் முனியப்பன் மற்றும் ஈஸ்வரி ஆகியோர் 1, 2ம் பிரதிவாதிகள் மீது கிரய ஆவணம் செல்லாது எனக் கூறி வழக்கறிஞர் அறிவிப்போ அல்லது குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இதுநாள் வரை கிரயத்துக்குண்டான தொகை முழுவதையும் முனியப்பன் மற்றும் ஈஸ்வரி 2ம் பிரதிவாதியிடம் இருந்து பெற்று கொண்ட காரணத்தால் கிரயத்தை முழுமையாக ஒப்புக்கொண்டு நடவடிக்கை எடுக்காமல் வந்தார்கள் என்றால் சரியல்ல. நானும், என் அப்பாவும் கூட்டு சேர்ந்து கொண்டு தான் இவ்வழக்கை நடத்தி வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பாவுக்கு முழுமையாக ஆவணங்கள் ஏற்படுத்துவது தெரியும் என்றும் அதே போல் முனியப்பன் மற்றும் ஈஸ்வரிக்கு பொது அதிகார பத்திரம் வழங்குகிறோம் என்று தெரியும் என்றும் ஆவணங்களை அறிந்து கொண்டு சார் பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 12.12.2007ம் தேதியன்று 1ம் பிரதிவாதி பெயரில் பொது அதிகார பத்திரம் ஏற்படுத்தி கொடுத்துள்ளனர் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தைக்கு வாதிகளுக்கும் எழுத, படிக்க தெரியாது. 12.12.2007ம் தேதியன்று அடமானம் வைப்பதாக கூறி அடமான பத்திரம் எழுதி

வாங்குவதாக கூறி 1ம் பிரதிவாதி அழைத்து சென்று பொது அதிகார பத்திரம் எழுதி வாங்கி கொண்டதாக சொல்வது உண்மைக்கு மாறானது என்று சொன்னால் சரியல்ல. பின்னிட்டு கிரய ஒப்பந்த ஆவணம் 2ம் பிரவாதிக்கு ஏற்படுத்தி கொடுத்ததும் கிரய ஒப்பந்த கால நீட்டிப்பு பத்திரம் எழுதி கொடுத்ததும் வாதிகளான முனியப்பன், ஈஸ்வரி மற்றும் என் தந்தைக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. அதுபோல 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு 14.11.2011ம் தேதியன்று கிரய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்ததும் வாதிகளான முனியப்பன் மற்றும் ஈஸ்வரிக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. கிரயம் ஆன நாளில் இருந்து தாவா சொத்து 2ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சுவாதினத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் தாவா சொத்தில் சுவாதினத்தில் இருந்து வருகிறார்கள் என்பதற்கு ஆதாரமாக தாவா சொத்திற்குரிய சிட்டா, வரி இரசீதுகள், மின்சார இரசீதுகள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மின்சார இரசீதுகள் தேவைப்பட்டால் தாக்கல் செய்ய முடியும். ஆனால், நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் அவ்வாறு தாக்கல் செய்ததாக இல்லை என்றால் சரிதான். ஆனால் பிராதுடன் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் அவ்வாறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யாமல் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2011ம் ஆண்டு 2ம் பிரதிவாதி கிரயம் பெற்ற நாள் முதல் அவரது தனிப்பட்ட அனுபவ சுவாதினத்தில் தான் தாவா சொத்து இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. 16.08.2017ம் தேதி என் அப்பா, என் அம்மா மற்றும் என் மீது தாவா சொத்துக்களில் அத்துமீறி சுவாதினம் எடுக்க முயற்சி செய்த காரணத்தால் குன்னத்தூர் காவல் நிலையத்தில் குற்ற எண்.241/2017 என்ற எண்ணில் இ.த.ச.பிரிவுகள் 448, 294(b), 323 மற்றும் 506(1) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால், அதுபோல பல முதல் தகவல் அறிக்கை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவால் நீக்கறவு செய்யப்பட்டது. நாங்கள் எல்லோரும் தாவா சொத்துக்களில் அத்துமீறி நுழைய முயற்சி செய்தும் பின்னிட்டு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் எங்களை தாக்கியதாக சொல்லி அவர்கள் மீது குன்னத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது தாவா சொத்துக்களில் நான்கு புறமும் கேமரா பொருத்தியிருந்ததால் அதனை அவினாசி காவல் நிலைய கண்காணிப்பாளர் பார்வையிட்டு பிரதிவாதிகள் மீது எந்தவித

தவறும் இல்லை என்று கூறி புகார் எடுக்க மறுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. குன்னத்தூர் காவல் நிலையத்தில் புகாரை ஏற்க மறுத்துவிட்ட காரணத்தால் அவினாசி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் எங்களை தாக்கியதாக கூறி முறையிட்ட போது அவர்களிடமும் எங்கள் மீது தவறு உள்ளது என்பதை வீடியோ ஆதாரங்கள் மூலம் அவினாசி காவல் துறை துணை கண்காணிப்பாளர் எங்கள் முன்னிலையில் எடுத்து காட்டியபோது நாங்கள் புகாரை நீதிமன்றத்தில் வாபஸ் பெற்று கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் கிரய ஆவணம் மோசடியானது என்று தெரிந்திருந்தால் 08.09.2012 க்கு பின்னிட்டு சில தினங்களில் கிரய பத்திரத்தை செல்லாது என கூறி வாதிகளான முனியப்பன் மற்றும் ஈஸ்வரி ஆகியோர் நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஆனால், நானும் என் அப்பாவும் பின்னிட்டு வீண்லாமடைய வேண்டும் என்று நோக்குடன் என் தந்தை என்னை கருவியாக பயன்படுத்தி முனியப்பனும், ஈஸ்வரியும் பொது அதிகாரம் வழங்கியதாக கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து 2011 ம் ஆண்டு முதல் 2 ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சுவாதினத்தில் இருந்து வருகிறது என்றும் அதனால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து விவரத்தில் தாவா சொத்தில் கான்கிரீட் கட்டிடம் இருப்பதாகவோ, சிமெண்ட் சீட்டால் வேயப்பட்ட கட்டிடம் இருப்பதாகவோ அதற்கு மின் இணைப்புகள் இருப்பதாகவோ தெரிவித்து தாவா தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. கட்டிடமும், கதவு எண்ணும் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவாவில் சொல்லியுள்ளது போல் வாதிகள் 1 ம் பிரதிவாதியிடம் ரூபாய் 2 இலட்சம் கடனாக பெற்று கொண்டு ஆண்டுக்கு 60 சதவீதம் வட்டி கொடுப்பதாக கூறியும் அதற்கு தாவா சொத்துக்களை அடமான பத்திரம் ஏற்படுத்தி கொடுக்க தான் 12.12.2007 ம் தேதியன்று சென்றதாக சொல்வது உண்மைக்கு மாறானது என்றால் சரியல்ல. சக்தி பைனான்ஸ் நிறுவனத்தை 1 ம் பிரதிவாதி நடத்தி வருகிறார். 2 ம் பிரதிவாதி அவரது மருமகள் ஆகும். 2010 ம் ஆண்டு வரை என் சித்தப்பா வட்டி செலுத்தி வந்தார் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. காரணம் இரசீது தர மாட்டார்கள். 2012 ம் ஆண்டு 1 ம் வாதிக்கு தொழிலில் நஷ்டம் ஏற்பட்டதால் வட்டி செலுத்த இயலாமல் இருந்து வந்தார் என தாவாவிற்காக உண்மைக்கு மாறாக பிராதில்

கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் ரூபாய் 2 இலட்சத்தை 1ம் பிரதிவாதி வாங்கி கொண்டு ஆவணங்களை இரத்து செய்து கொடுக்க அவர் மறுத்ததாக சொல்வதும் உண்மைக்கு மாறானது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அவ்வாறு பணத்தை வாங்கி கொண்டு ஆவணங்களை இரத்து செய்ய மறுத்ததாக சொல்லி உடனடியாக பிரதிவாதிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் அதனால் தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வா.சா.ஆ.1 பொது அதிகார பத்திரம் நான் வாங்கும் வரை தாவா சொத்துகளில் எனக்கும் என் தந்தைக்கும் அதில் எவ்வித உரிமையும் பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. கூட்டுக்கூடும்பமாக உள்ளோம். அவ்வாறு கூட்டுக்குடும்பமாக இருந்து தாவா சொத்தை அனுபவித்து வருவதாக பிராதிலும், முதல் நிலை விசாரணையிலும் நான் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். ஆகவே, தாவாவில் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு விளம்புகை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் அது தேவைப்படாது. தாவா தளளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

(1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை தங்களது தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.)

**<u>மறுவிசாரணை</u> : இல்லை.**

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN

Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2025.07.19 13:16:16 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.